**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**



# Women's Oppression and Progressive Ideas as Revealed in the Novel *Thooppukari*

**Dr. P. Anbarasi,** Assistant Professor of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6748-6469**
**DOI: 10.5281/zenodo.15831360**

## Abstract

*Literature is a depiction of human society. Literature has recorded social problems as well as the noble ideals of society. Tamil literature serves as a mirror reflecting the society in which it was created. One of the notable novels that emerged in Tamil Literary contemporary literature is "Thooppukkari". Malarvathi is the author of the novel. She has written this novel about a scavenger woman living in the western part of the Kanyakumari district. Over time, a certain ethnic group, especially the female community of the group has been enslaved for the purpose of scavenging. Basically, women have been subjected to poverty in social and economic situations without progress. She is insulted in moral terms by society. She has been kept as a woman without any positive relations. It is easy to enslave a woman when she lacks the above-mentioned strengths that could empower her. So, a marginalised woman is mentally stereotyped as a slave. They also exploit the hard labour of women. The pain and suffering are greater for the enslaved ethnic group and especially the life of women. Malaravati has recorded that a woman subjected to these sorts of suppression and oppression thinks that she can educate her next generation to move forward through her novel "Thooppukkari."*

**Keywords:** Tamil Novel, *Thooppukkari*, Woman's Labour, Education, Next Generation.

## References

[1] Malarvathy. *Thooppukkari*. Kizhakku Pathippagam. Chennai. 5th Edition. 2023
[2] Megalin Chandra. *Padaippilakkiam – Vilimbunilai Makkal Aaivu Nokku*. International Tamil Research Centre. Chennai. First Edition. 2011
[3] "Vilimbu Nilai Makkalin Vaazhvil Vilakketruvom." TNPSC Thervupettagam, 2023. https://tinyurl.com/436fabmw
[4] M. Kannan. "Ra. Natarasanin Sirukathaikalil Vilimbu Nilai Makkalin Vaazhkai Murai." *Muthukamalam.* http://www.muthukamalam.com/essay/seminar/s2/p13.html
[5] Vanisri Sivakumar. "Manathai Ulukkum Marakka Mudiyaatha Naaval Thoopukkaari." Dinamani, 7 July 2024, kaalai 9:00. https://tinyurl.com/5y7mer7w

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

# *தூப்புக்காரி* புதினம் புலப்படுத்தும் பெண் ஒடுக்குமுறையும் முன்னேற்றச் சிந்தனைகளும்

**முனைவர் ப. அன்பரசி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-6748-6469**
**DOI: 10.5281/zenodo.15831360**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித சமூகத்தின் சித்திரிப்பு இலக்கியங்கள் ஆகும்.சமூகத்தில் உள்ள உயரிய கருத்துக்களைப் போன்றே சமூகச் சிக்கல்களையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.அவ்வகையில் கதை இலக்கியம் தான் படைக்கப்பட்ட சமூகத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன.சமகாலத்தில் தோன்றிய புதினங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று தூப்புக்காரி.அதன் ஆசிரியர் மலர்வதி. கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் வாழ்ந்துவரும் துப்புறத் தொழிலாளப் பெண்ணைப் பற்றி இப்புதினத்தினைப் படைத்துள்ளார். காலம் காலமாக ஒரு குறிப்பிட்ட பிறப்பு சார்ந்த இனம், அதிலும் பெண் சமூகம் அடிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றது. அப்பெண் முன்னேறவிடாமல், சமூக, பொருளாதார நிலையில் வறுமைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளாள். ஒழுக்க நிலையில் அவதூறு பேசுகின்றது.உறவுகள் அற்றவளாகப் பெண்ணை வைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட வலிமைகள் இல்லாத நிலையில் பெண் இருக்கும் பொழுது அவளை அடிமைப்படுத்துவது எளிது.அதனால் விளிம்பு நிலைப் பெண் மனதளவில் நீ அடிமை, அடிமை என உருவாக்கப்படுகிறாள். அப்பெண்ணின் உழைப்பையும் சுரண்டுகின்றனர். அடிமைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கே வலியும் வேதனையும் அதிகம். ஒடுக்குமுறைக்கு ஆட்படுத்தப்பட்ட பெண் அதிலிருந்து முன்னேற அடுத்த தலைமுறைக்குக் கல்வி கற்பிக்கலாம் என எண்ணுவதை தூப்புக்காரி புதினத்தில் மலர்வதி பதிவு செய்துள்ளார்.*

**குறிப்புச்சொற்கள்:** தமிழ் நாவல், *தூப்புக்காரி*, பெண்ணின் உழைப்பு, கல்வி, அடுத்த தலைமுறை.

## முன்னுரை

மனித சமூகத்தின் சித்திரிப்பு இலக்கியங்கள் ஆகும். சமூகத்தில் உள்ள உயரிய கருத்துக்களைப் போன்றே சமூகச் சிக்கல்களையும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வகையில் கதை இலக்கியம் தான் படைக்கப்பட்ட சமூகத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. சமகாலத்தில் தோன்றிய புதினங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று தூப்புக்காரி.அதன் ஆசிரியர் மலர்வதி. கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப்

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

பகுதியில் வாழ்ந்துவரும் துப்புறத் தொழிலாளப் பெண்ணைப் பற்றி இப்புதினத்தினைப் படைத்துள்ளார்.தூப்புக்காரி குறிப்பிடும் துப்புறவுத் தொழில் செய்யும் பெண்களைச் சமூகம் சுரண்டும் முறைமைகளை ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**விளிம்புநிலைப் பெண்கள்**

மனித சமூகத்தில் துன்பமான மாற்றங்கள் நிகழும் பொழுதெல்லாம் விளிம்பு நிலை மனிதர்களும் பெண்களும் அதிகம் பாதிக்கப்படுவார்கள். பொருளாதாரம், கல்வி, உறவுமுறைப் பாதுகாப்பு ஆகிய அனைத்து நிலைகளிலும் அப்பெண்கள் வலிமை இழந்தவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவர்களிடம் வேலைகளும் சுரண்டப்படுகின்றன என்பதை தூப்புக்காரி பதிவு செய்துள்ளது.

**வாழ்வாதாரத்திற்கான உழைப்பு**

அரசு விதியின் படி ஒரு மனிதனுக்கு ஒரு நாளின் சராசரி பணி நேரம் 8 மணி நேரம் ஆகும். அதற்கு மேல் பணியாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்படும்.சில இடங்களில் தொழிலாளர்களின் வறுமை காரணமாக கூடுதலாக ஊதியம் கொடுக்கப்படும் என்ற பெயரில் கூடுதல் வேலை வாங்கப்படுவது உண்டு. தூப்புக்காரி புதினத்தில் மருத்துவமனையில் மனிதக் கழிவுகளைச் சுத்தம் செய்யும் பெண், அலுவலகப் பணியையும் தாண்டி, கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்ற நிலையில் பெண்ணின் பிரசவத் துணிகளைச் சுத்தம் செய்கிறாள். அப்போது ஏற்கெனவே செய்த பணிச்சுமையையும் மீறிப் பணியாற்றிய களைப்பில் இருப்பதை,

> **வாளியில் தண்ணீர் பிடித்து துணிகளை அதில் போட்டு முக்கினாள்.தண்ணீர் முழுவதும் இரத்தமாய் மாறியது.இடது உள்ளங்கையில் உருட்டி வைத்த இருபது ரூபாயை இடையில் சொருகி வைத்தாள்.துணிகளை வேகமாக அலசத் துவங்கினாள். ஒரு வழியாகத் துவைத்து விட்டு நிமிருகையில் முதுகு விண்ணென வலித்தது (மலர்வதி, தூப்புக்காரி, ப.27)**

என்று மலர்வதி பதிவு செய்துள்ளார். அதிலும் அப்பெண் அனுபவிக்கும் கொடுமையாக உழைப்பிற்கான ஊதியமாகிய பணம் தண்ணீரில் அடித்துச் செல்லப்படுகிறது. தனதுஉழைப்பு வீணெனக் கீழே செல்வதை,

> **சுத்தப்படுத்திய துணியை எடுத்தபடியே இடையில் சொருகிய சேலையை கனகம் இழுத்துவிட்டாள். வயிற்றிடைப் பகுதியில் சொருகி வைத்த இருபது ரூபாய் அவளின் இழுப்புக்கு ஈடு கொடுக்காமல் தெறித்துப் போய் கழிவு பாய்ச்சலில் விழ, கனகம் பதறினாள்.**
>
> **'என்.. பைசா.. ஆ' அவள் பதட்டத்தை அறியாத காகித ரூபாய் கழிவு நீரில் அடித்துச் செல்லப்படுவதை கண்ணீரோடு பார்த்து நின்றாள்.இவ்வளவு நேரமும் முதுகு தரித்து, முகம் வியர்த்து, முகம் நுகர்ந்து அலவி என்ன பயன், துடித்தாள்.**

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

**எப்போதுமே உழைப்பு வீணாகி போகும் போது உள்ளம் உடைந்தே போகும். இத்தனை நேரம் அனுபவித்த அத்தனை உழைப்புக்கும் பலன் இல்லாமல் போவதை உணர்ந்த போது மன வலி அதிகமாகப் புரண்டது கனகத்திற்கு. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 28)**

என்று *தூப்புக்காரி* பதிவு செய்துள்ளது. தான் செய்யும் வேலைக்கு கூலியை நிர்ணயம் செய்து கேட்க இயலாத நிலையிலும் தனது வலியை வெளியில் கூற இயலாத நிலையிலும் பெண்கள் இருக்க வைக்கப்பட்டுள்ளதையும் இப்புதினம் பதிவு செய்துள்ளது.

**விளிம்புநிலை மக்களின் நடைமுறை வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது சற்று சிரமமான ஒன்றாக உள்ளது.காரணம் அவர்களுக்கு நிலையான மாற்றத் தொழிலும் நிலையான வருமானமும் கிடைக்காததுதான்.இதனால் அவர்களில்பலர் தங்கள் பாரம்பரிய தொழிலுக்குச் செல்வது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. (விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் விளக்கேற்றுவோம்)**

**மனதளவில் காயப்படுத்தப்படுதல்**

விளிம்புநிலைப் பெண்ணுக்கு எவ்வகையிலும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையில் பணியாற்றும் பெண் கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்பதற்காக திருமண வீட்டில் இலை எடுக்கும் பணிக்குச் செல்கின்றனர். பசியின் காரணமாக உணவு உண்டுவிட்டு இலை எடுக்கலாம் என எண்ணிப்பந்தியில் அமர்ந்து உண்கின்றனர். இலை எடுப்பவர்கள் முதலில் உண்ணக்கூடாது என பலர் முன்னிலையிலும் அவமானப்படுத்தப்பட்டு எழுப்பப்படுகின்றனர்.

**வவுறு உரே பசி.ஒரு பிடி சோறு தின்னா தெம்பு கிடைக்குமுண்ணு போயிருந்து தின்னா.அந்த ஆகாரம் தொண்டையிலிருந்து இறங்குக்கமுன்ன எழுப்பி விட்டுட்டானே… ஆளுவா எல்லாம் பாத்துனமில்லா. எனக்கு பரியெடாயிருக்கு மோளே..' கனகம் அழ கூடவே உள்ள ரோஸ்ஸிலியும் அழத் துவங்கினாள். (மலர்வதி, தூப்புக்காரி, ப.36)**

பசிக்கு உணவருந்தக்கூட இயலாத நிலையில் அடித்தட்டுப் பெண்கள் இருந்ததை இப்பகுதி பதிவு செய்துள்ளது.

**கேலி செய்யப்படும் பெண்ணின் நிலை**

பொருளாதார நிலையில் இயலாமையால் துப்புரவுத் தொழில் செய்யும் பெண்களின் வாழ்வும் தொழிலும் அடுத்த தலைமுறையினரின் வாழ்வும் வார்த்தைகளால் கேள்விக்குறியாக்கப்படுவதை,

**தள்ளையிக்க சோலிய தொடங்கியிருக்காளே. தள்ளையையே சேர்க்கவே அருவருப்பா இருக்கிறப்ப, மொவளையும் அவளுக்கசோலிக்க விட்ருக்கிய. வேற ஒரு சோலியும் இவளுக்கு இல்லியா…'**

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

**'இதுல நல்ல பைசா காணும்..'**

**'ஆமா பெரிய பைசா.அழுக்கு தொடச்சி எச்சி வார நின்னா ஆயிரமா கொடுப்பாங்களாக்கும்? இதை விட அண்டியாபிசு போலாம் இல்லியா..'**

**'அவ மாப்பிளைச் செத்த நேரம் குட்டிக்கி சின்ன வயசு.அதை விட்டுட்டு எப்பிடி அண்டியாபிசுக்கு போவா.அதையும் இடுக்கியிட்டு இல்லா ஆசுத்திரிக்கு போவா.அப்பவே பழகுன தொழிலிது.ஆஸ்பத்திரியில இருக்கிறவங்களுக்க பீ மோளுண்ணும் தூமத் துணிகளுண்ணு அலசி கொடுக்கிறப்ப அவங்க கொடுக்கிய அஞ்சும் பத்தும் கை நீட்டி வேண்டி வேண்டி அதே அவளுக்குப் பழவிப் போச்சு..'**

**'போட்டு நமக்கென்ன அவளுவா எப்பிடியும் போட்டு, மொவளை இப்பிடியே தொழில் செய்ய விட்டா எவன் கெட்டிட்டு போக்கு வருவான்?' (மலர்வதி, தூப்புக்காரி, ப. 39)**

என்ற பகுதி தெளிவிக்கின்றது. தான் செய்ய முடியாத வேலையைச் செய்ய வைப்பதற்குத் தேவைப்படும் பெண், பணம் பெறும் பொழுது கெலி செய்யப்படுகிறாள். கைக் குழந்தையுடன் கணவன் இறந்த பின்பு வாழ வழி தெரியாது துன்பப்படும் பொழுது உதவி செய்யாத உறவுகள், பசிக்கு உணவருந்திய பந்தியிலிருந்து வெளியேற்றப்பட்டபொழுது நீதி கேட்காத மனிதர்கள், ஆதரவற்ற பெண் உழைத்து ஊதியம் பெறுவதை ஏளனமாகப் பார்க்கின்றது.

**கழிவறையைச் சுத்தம் செய்யும் தொழில் மிகவும் கீழானதாகக் கருதப்படுகிறது.இந்தத் தொழிலைச் செய்பவர்களைப் பிறர் அவமரியாதையுடனேயே நடத்துகின்றனர். அவர்களைக் காணும்பொழுதே முகம் சுளிக்கின்றனர் (ம.கண்ணன்)**

என்ற கூற்றிற்கேற்ப *தூப்புக்காரி* புதினத்தில் கழிவறையைச் சுத்தம் செய்யும் பெண் சமூகத்தினால் அவமரியாதையுடன் பார்க்கப்படுகிறாள்.

**ஆணாதிக்க வர்க்க சமூகம்**

பெண்ணை ஆண் கொடுமைப்படுத்திய காலம் தாண்டி பெண்ணைப் பெண் கொடுமைப்படுத்தும் சூழல் உருவாகியதை *தூப்புக்காரி* பதிவு செய்துள்ளது. ஒரு பெண்ணைக் குறை சொல்ல நினைத்தால் சமூகம் கையிலெடுக்கும் ஆயுதம் அவளது நடத்தையினைக் குறை கூறுதல் ஆகும். ஆண் செய்யும் தவறுக்கும் பெண் மீதே பழி சுமத்தப்படுகிறது.அதனை மற்றொரு பெண் செய்வது கொடுமையிலும் கொடுமையாக உள்ளது.தவறு செய்த ஆணைப் பெற்ற பெண் குரலை உயர்த்திப் பேசுவதையும் பெண்ணைப் பெற்றவள் அதற்குப் பயம் கொள்ளுதலும்,

**பெண்ணைப் பெற்ற ரோஸ்லிலி கோழையா நிக்குறா. .. ஆனா ஆணைப் பெத்தவா பெரிய மத்தவளா வீரசாலியா நிக்கிறா..ஏண்ணா அவா பெத்த ஆணுட்ட பெரிய சாமானம் இருக்கு இல்லியா. அவளுக்க மொவன் ஆயிரம் பேருட்ட போனாலும் குத்தமில்ல. ஆனா ரோஸ்லிலிக்க மொவா மட்டும் குத்தக்காரி போல நின்னு துள்ளியா. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 108)**

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

என்ற பகுதி விவரிக்கின்றது.

**பெண்ணுக்கு நீதி மாறுதல்**

நீதி என்றால் அதை ஆண் பெண் இருவருக்கும் பொதுவில் வை என்பது பாரதி வாக்கு.ஆனால் இவ்வுலகில் பணத்தின் அடிப்படையில், பதவியை முன்வைத்து, ஆள் பலத்தினைக் கொண்டு நீதியின் தன்மை மாற்றப்படும். ஒழுக்கம் என்ற நிலையில் தவறிழைக்கும் ஆணை விடுத்து, பெண்ணுக்கு மட்டும் நீதி மறுக்கப்படுவதை,

> **இல்லண்ணாலும் இது ரெண்டு வகை நீதி எழுதும் ஒலகம் தானே.அவனவன் எத்ர பேருக்க கூட போனாலும் அது மானப் பிரசினையாகாது.பெண்ணு ஒருத்தனுட்ட பேசினாலே போதும். அவா ஏதோ பெரும் காம கொடூரி போலும், ஒழுக்கங்கெட்டவள் போலும் தீர்ப்பு சொல்லி விடுறாங்க. ரோஸ்ஸிலிக்க வீட்டுல போய் பேசுற அவளுக்க மொவன் குத்தக்காரன் இல்லியாம். ஆனா ரோஸ்ஸிலிக்க மொவா மட்டும் குத்தக்காரியாம்.ரோஸ்ஸிலிக்கி அவளை சரியா கொடுக்க தெரியல. பெண்ண பெத்தவா இல்லா, அதான் பாவம் போல பதறி பதறி பேசினா… (மலர்வதி, தூப்புக்காரி, ப.108)**

என்ற கதைப்பகுதி தெரிவிக்கின்றது.

**போகப்பொருளான பெண்**

தாயாய், தந்தையாய், சகோதரியாய், மகளாய்ப் பார்க்கப்பட்ட பெண் சில மனிதர்களால் இன்பம் துய்க்கும் பொருளாகவும் பார்க்கப்படுகிறாள்.சூழலின் காரணமாகத் தன்னை இழந்த பெண், வாழ்க்கையைத் தொலைக்கிறாள். இதில் பெண் விருப்பப்பட்டாலும், அவள் விரும்பாவிட்டாலும் தண்டனை பெண்ணுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அதனால் பெண்ணின் வாழ்க்கை தொலைந்து சமூகத்தில் தனது மதிப்பினை இழக்கிறாள். இத்தயை பெண்ணின் நிலையை,

> **இந்த ஒலகத்துல அப்பன் இல்லாம நிறைய காட்டுக்குட்டிகள் பெறக்கிறாங்க மாரி.ஆத்ர அவசரத்துக்கு, வெறும் ஆசைக்காக மட்டுமே பெண்ணைக் கட்டிப்பிடிச்சிட்டு அவனவன் ஓடிடுவான்.ஆனா அதே பெண்ணு வயித்துல வளரிய கொழந்தைக்கு மட்டும் அப்பனா தன்னை ஏத்துக்கவும் மாட்டான்.இதுனால வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் இந்த ஒலகத்துல வாழ்க்கையைத் தொலச்ச பல பெண்ணுங்கள் இப்பவும் உலக மூலைகளில் வாழுறாங்க. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 112)**

என்று மலர்வதி பதிவு செய்துள்ளார்.

**ஆணின் கோழைத்தனமும் பெண்ணின் மன உறுதியும்**

ஆணால் பாதிக்கப்பட்டு சமூகத்தில் மரியாதையை இழந்த பெண்களில் பலர் தங்களைத் தண்டித்துக் கொள்வர்.அவளது வாழ்வைச் சிதைத்த ஆண் தனக்கென ஒரு வாழ்க்கையைத்

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

தேடிக்கொண்டு நகர்ந்துவிடுவான். தனக்குப் பிடித்த பெண்ணாக இருந்தாலும் தான் திருமணம் முடிக்க எண்ணினாலும் மன உறுதி இன்மையாலும் தப்பித்தல் மனப்பான்மையினாலும் ஆண் தான் விரும்பிய பெண்ணை மணம் முடிக்காமல் தவிக்கிறான். குற்ற உணர்ச்சியால் ஆண் தவிப்பதை,

> **அப்பா, குடும்பம், சமூகம் என பாத்து பாத்து என் உண்மையான சந்தோசத்தை இழந்து போயிட்டேன்.இனி கடைசி வரைக்கும், நான் சாகுற அந்த நிமிசம் வரைக்கும் இது எங்கூடவே கிடக்கிற குற்றவலி.வெளியில் யாருக்குமே தெரியாம எனக்கு நானே கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டு இருக்கிற மரணவலி. இனி வரப்போகிற என் வாழ்க்கையில் எத்தனை கோடி, கோடி பணம் வந்தாலும், புகழ் வந்தாலும் வசதி வாய்ப்புகள் வந்தாலும், என் மனசாட்சியின் கூர்முனை வாள் மாதிரி என்னை குத்திக் கிழிச்சிட்டே இருக்கும். என்னை மனசார நேசிச்ச என் பூவு தெருவுல நிக்கிறா.ஏன் என்னால ஓடி போய் அவளை காப்பாத்த முடியல. அன்னிக்கும் அவளை விட்டுட்டு தானே போனேன்.இந்த சமூகம் ஏற்படுத்தி வைத்திருக்கிற கட்டமைப்புகளைத் தாண்டி எனக்கு பூவை ஏத்துக்க முடிஞ்சா.முடியலியே. இதுனால எனக்கு இந்த வலியும், குற்ற உணர்வும் என் வாழ்க்கையின் சாபமா எங்கூடவே கிடக்கும். (மலர்வதி, தூப்புக்காரி, ப. 128)**

என்று ஆண் புலம்புகிறான். ஆனால் அவனால் பாதிக்கப்பட்ட பெண் சமூகத்தினை எதிர்த்து, திருமணம் முடிக்காமல் உண்டான குழந்தையைப் பெற்று வளர்க்கும் மன உறுதியோடு இருப்பதை,

> **முறையான அப்பனைக் காட்டிக் கொடுக்க இல்லாம போகிறப்ப, ஒனக்கும் அந்த நிலை தான் வரும்.அப்படியொரு நிலை ஒனக்கு வேணுமா?**
> **இருக்கட்டு மாரி.அப்பிடிப்பட்ட பொண்ணுங்களுக்க இடத்துல நானும் வாழ்ந்து பாக்கிறேன். இந்த உலகத்துல இப்பிடிப்பட்ட பெண்ணுங்களைப் போல வீரசாலி பெண்ணுங்க யாருமே இல்லண்ணு தான் எனக்கு சொல்லத்தோணுது. காதலிலோ, விபத்திலோ இப்படிப்பட்ட பிள்ளைகளை வாங்குன பெண்ணுங்களில் பலரும் தனி மனுஷியா தங்களுக்க பிள்ளைங்களை வளத்து, இன்னொரு கலியாணமும் பண்ணாம வாழுறாங்க. ஊரு ஒலகம், என்ன சொன்னாலும் அதையெல்லாம் பெருசா எடுத்துக்காம, களங்கம் சுமந்தும் வாழுறாங்க பாரு. அதான் பெருசு. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 112)**

என்ற கதைப்பகுதி விவரிக்கின்றது.விருப்பத்தின் காரணமாக ஒரு பெண்ணைத்தாயாக்கிய ஆணால் அக்குழந்தைக்குத் தந்தையாக வாழ இயலவில்லை.தனது கோழைத்தனத்தால் மறைக்கிறான்.ஆனால் பெண் சமூகம், உறவுகள் என அனைத்தாலும் ஒதுக்கப்பட்டு, தனியாக குழந்தையை வளர்க்கும் நிலை இருந்துள்ளது.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

**பெண்ணின் உழைப்புச் சுரண்டல்**

ஊதியத்திற்கு வேலை பார்க்கும் நிலைக்கு பெண்கள் ஆட்படுகின்றனர். ஊதியம் தாண்டியும் வேலை பார்க்க வைக்கப்படுகிறார்கள். பணி செய்பவர்களுக்கு நிறுவனம் கொடுக்க வேண்டிய எந்தவித உதவிகளையும் சில இடங்கள் செய்யவில்லை.மாறாக அவர்களது வறுமையைப் பயன்படுத்தி அவர்களது தலைமுறையினரையே அடிமையாக்கும் நிலையை *தூப்புக்காரி* புதினம் சித்திரித்துள்ளது. மருத்துவமனையில் பணி செய்யும் பெண் கணவனுக்கு அதே மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கிறாள்.மருத்துவமனையில் கணவனது வைத்தியத்திற்கு கடன்படுகிறாள். அதனைக் காரணமாக்கி அவளது மகளையும் மருத்துவர் பணிக்கு வரவழைக்க முயலுவதையும் அப்பெண்ணின் விருப்பமின்மையையும்,

> **பத்திருபது வருசமா இந்த ஆசுத்திரி நாத்தம் பிடிச்சி, பிடிச்சி ஒலகத்துல வேற எந்த மணமோ, கொணமோ தெரியாம போயிட்டேன். அழுக்கு வாரி அல்லாடுறது என்னோடு முடிஞ்சிப் போவணும். நீயாவது இந்த ஆசுத்திரி பக்கம் வரப்பிடாதுண்டு நினச்சிட்டிருக்கேன்.பெரிய மேடம் ஒன்னபப்த்தி அப்பப்ப கேக்கியது உண்டு. பழைய கடமெல்லாம் கிடக்கு இல்லியா அதான் ஒன்ன கேட்கியது. அவங்க கண்ல பட்டு கொஞ்சா கொம்மைக்கி உதவ பண்ணுண்ணு சொல்லியது போல இந்த அழுக்குல தள்ளி விட்ருவாங்க.. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 21)**

என்ற கதைப்பகுதி தெளிவிக்கின்றது.

> **உழைப்பு ஒன்றையே மூலதனமாக உடைய அவர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ற ஊதியம் இல்லாமல் வருந்துகின்றனர். (மேகலின் சந்திரா, படைப்பிலக்கியம் – விளிம்புநிலை மக்கள் ஆய்வு நோக்கு, ப. 144)**

மருத்துவமனை நிர்வாகம் தாய் பட்ட கடனுக்காக மகளை துப்புறவுப் பணியாற்ற வைக்கிறது.அவளது தனிப்பட்ட வாழ்க்கையையும் விமர்சனம் செய்கிறது. திருமணத்திற்கு முன்பு கருவுற்றிருக்கும் பெண்ணை நோக்கி,

> **ஒங்கம்மா கூட்டி விட்ட கடனெல்லாம் உனக்கு தெரியும்தானே. அவளுக்க மருந்து செலவு, அது இதுண்ணு எவ்வளவு பாக்கி கிடக்குண்ணு தெரியும்தானே. ஏதோ பாவமுண்ணு கொஞ்சம் இரக்கம் காட்டினா, நீ காட்டியிருக்கிற வேலை ரொம்ப நல்லாயிருக்கு. எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் வச்சிட்டு, அவசரத்தனமா கள்ளத்தனமா பிள்ளை வாங்கிட்டு நிக்ற உன்னை இந்த சமூகம் இனி என்ன சொல்லுமுண்ணு நெனச்சியா நீ… (மலர்வதி, தூப்புக்காரி, ப. 119)**

என்று கேள்வி கேட்கிறது.சேவை மனப்பான்மையில் செயல்படவேண்டிய மருத்துவமனையும் ஆதரவற்ற பெண்ணின் உழைப்பைச் சுரண்டியதோடு வாழ்வையும் கேள்வி கேட்கிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுத்தால் அப்பெண் சமூகத்தில் வளர்ச்சியை நோக்கிச் சென்று விடுவதற்கான வாய்ப்பு உள்ளதால் அவளது பொருளாதார உரிமை சுரண்டப்பட்டுள்ளது.

Volume 5, Issue 1, May 2025 E-ISSN – 2583-715X

**உடைமை பறிப்பு**

வறுமையைப் பயன்படுத்துபவர்கள் ஏமாற்றுபவர்கள், வறுமைப்பட்டவர்களின் உடைமைகளைப் பறிப்பதை பன்னெடுங்காலமாகச் செயல்படுத்தி வருகின்றனர். நிலம் உள்ளிட்ட உடைமைகளைப் பறித்தது ஒரு காலம் என்றால் தற்பொழுது அவர்களின் குழந்தைகளைப் பறிப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.கணவனை இழந்த பெண் குழந்தையை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறாள். மருத்துவமனையில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட அப்பெண், குழந்தையை அழைத்துக் கொண்டு பணிக்குச் செல்கிறாள். குழந்தையும் தாயும் துன்பப்படுவதால், அதிலிருந்து மீட்பதற்காக குழந்தையைத் தத்துக் கொடுக்குமாறு நிர்வாகம் அறிவுறுத்துகிறது. அவளது அழுக்கடைந்த உலகம், குழந்தை சுகாதாரமின்மையில் வளரும் நிலை, குழந்தையின் முன்னேற்றம் என அனைத்தையும் கூறி மூளைச் சலவை செய்கின்றனர். அவளது நிலையைப் பயன்படுத்த என்னும் பணக்காரத்தன்மையை,

> **உன் துணைக்கென்று உன் மகளை வளத்தினா அவளுக்க எதிர்காலம் இருட்டாகு முண்ணு நினச்சிப்பாத்தியா? சத்தான உணவு, நல்ல தரமான ஆடைகள் கூட வாங்கிக் கொடுக்கிற நிலை உனட்ட இல்ல. இப்பவே இந்த நிலையில் வாழுற நீ, நாளை உன் மகள் வளரும்போது அவளைஎப்பிடி நல்ல விதமா வாழ வைப்ப. இப்பிடி தத்து வாரி ஏதோ கொளுசம் படிக்க வைப்பண்ணு வை. அதுக்கப்புறம் அவளுக்கான மேல் படிப்பு, அவளுக்கான திருமணம், இதெல்லாம் எப்பிடி கொடுப்ப? பாசம் என்கிற பெயருல நாள் தோறும் உன் மகளை இருட்டுல தான் போட்டு பூட்டப்போகிற. உன் மகளை பெரிய ஆளா வளக்க உனக்கும் ஆசையிருக்கும். ஆனா அது உன்னால முடியாது.**
>
> **அடித்துக் கொழுத்துற வெயிலுல, அழுக்குல கிடந்து அழுறதை நல்லாப்பாரு.வேண்டா வெறுப்புல அவளை வாச்சர் வச்சிட்டு நிற்கிறதையும் பாரு. இப்படியொரு வாழ்க்கை அனுபவிக்கவா உன் மகா பிறந்தா… (மலர்வதி, தூப்புக்காரி, பக். 135-136)**

என்ற பகுதி புலப்படுத்துகின்றது.

**பறந்த மனப்பான்மை**

உழைப்பவர்களுக்கே உழைப்பின் அருமை புரியும்.வலியும் வேதனையும் புரியும். வறுமையின் தன்மை தெரியும். அதிலிருந்து மீள்வதற்கான வழிகளைக் கண்டறிய முயற்சி செய்வர். அவ்வகையில் சிலருக்கு உலகளாவிய பரந்த மனப்பான்மை இருக்கும்.தனது துன்பத்தினை விட பிறரது துன்பத்தினைப் பெரிதாக எண்ணி, அதனைப் போக்க முயற்சி செய்வர். கழிவுகளைச் சுத்தம் செய்யும், ஆதரவற்ற பெண், தனது குழந்தைக்கு தான் அனுபவிக்கும் துன்பமும், வாழ்க்கையின் சிக்கல்களும் புரிய வேண்டும். அதன் மூலம்

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

அக்குழந்தை கழிவுகளைச் சுத்தம் செய்யும் எந்திரம் கண்டுபிடிக்க வேண்டும் எனக் கனவு காண்கிறாள். இதனை,

> **என் மொவளுக்கு நாத்தம் தெரியணும்.. அப்ப தான் என்னைப் போல தூத்து வாருறவளுக்க வலிகளும் புறக்கணிப்புகளும் தெரியும். இதெல்லாம் தெரியாம வளந்தா ஒரு வேளை இவள் மனோவைப் போல ஒரு கோழையா சுயநலவாதியா, சந்தர்ப்பவாதியா போயிருவா. மாரி மாதிரியான விசால மனவு பெற, இவா எங்கூட தான் வளரணும். அப்பதான் என் மகா நல்தா வளருவா. தாமரைப் பூவுக்க வேரு குளத்து வெள்ளத்துக்க தொழில தானே கிடக்கு. அந்த தொழியிக்க சத்திலண்டு தானே தாமரை பூக்குது. இந்த பூவரசி ஒரு வேளை அழுக்கியா இருக்கலாம்… எங்கிட்டயிருந்து என் மகா ஒரு தாமரைப் போல ஏதோ ஒரு நாள் விரியத்தான் போகிறா. என்ன வறுமையானாலும் பசியானாலும் எங்கூடவே எனக்க மகா வளரட்டு. (மலர்வதி, தூப்புக்காரி, ப. 140)**

என்ற கூற்று உறுதி செய்கிறது. **"துப்புரவுத் தொழிலாளர்களை இன்னமும் மனிதர்களாகக் கூட பார்க்காத இந்த சமூகத்தின் கண்களைக் கோடரி கொண்டு திறக்க வைக்கும் முயற்சி" (வாணிஸ்ரீ சிவகுமார்)** யாக பூவரிசியின் சிந்தனையை மலர்வதி பதிவு செய்துள்ளார். தான் விரும்பிய பணக்கார ஆண், தனது குழந்தையின் தந்தையாகவே இருந்தாலும் அவனது கோழைத்தனத்தினையும் சுயநலத்தினையும் வெளிப்படுத்தி தனது மகள் அவன் போன்று வளரக் கூடாது எனவும் பிறருக்கு உதவும் ஆண் போன்று வளர வேண்டும் எனவும் என்னும் பெண்ணின் சிந்தனை உயர்ந்ததாக உள்ளது.

**முடிவுரை**

காலம் காலமாக ஒரு குறிப்பிட்ட பிறப்பு சார்ந்த இனம், அதிலும் பெண் சமூகம் அடிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றது. அப்பெண் முன்னேறவிடாமல், சமூக, பொருளாதார நிலையில் வறுமைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளாள். ஒழுக்க நிலையில் அவதூறு பேசுகின்றது.உறவுகள் அற்றவளாகப் பெண்ணை வைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட வலிமைகள் இல்லாத நிலையில் பெண் இருக்கும் பொழுது அவளை அடிமைப்படுத்துவது எளிது. அதனால் விளிம்பு நிலைப் பெண் மனதளவில் நீ அடிமை, அடிமை என உருவாக்கப்படுகிறாள். அப்பெண்ணின் உழைப்பையும் சுரண்டுகின்றனர். அடிமைப்படுத்தப்பட்ட சமூகத்திற்கே வலியும் வேதனையும் அதிகம். ஒடுக்குமுறைக்கு ஆட்படுத்தப்பட்ட பெண் அதிலிருந்து முன்னேற அடுத்த தலைமுறைக்குக் கல்வி கற்பிக்கலாம் என எண்ணுவதை தூப்புக்காரி புதினத்தில் மலர்வதி பதிவு செய்துள்ளார்.

**குறிப்புகள்**

[1] மலர்வதி. *தூப்புக்காரி*. கிழக்கு பதிப்பகம். சென்னை. ஐந்தாவது பதிப்பு. 2023

**Volume 5, Issue 1, May 2025** **E-ISSN – 2583-715X**

[2] மேகலின் சந்திரா. *படைப்பிலக்கியம் – விளிம்புநிலை மக்கள் ஆய்வு நோக்கு.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை. முதல் பதிப்பு. 2011

[3] "விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் விளக்கேற்றுவோம்." *TNPSC Thervupettagam*, 2023, https://tinyurl.com/436fabmw

[4] ம. கண்ணன். இரா. நடராசனின் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை முறை." *முத்துக்கமலம்.* http://www.muthukamalam.com/essay/seminar/s2/p13.html

[5] வாணிஸ்ரீ சிவகுமார். "மனதை உலுக்கும் மறக்க முடியாத நாவல் தூப்புக்காரி." தினமணி, 7 ஜூலை 2024, காலை 9:00, https://tinyurl.com/5y7mer7w

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.